# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 100/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவஇளங்கோவன் | Caste | : |
| Father/Husband Name | : செல்லையா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused absent, Petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செக்காணூரனி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் முருகராஜா அவர்களின் கையொப்பம் எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து சாட்சி சொல்கிறேன். கடந்த 27.12.2015 ஆம் தேதி 11.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் முருகராஜா நிலைய பொறுப்பில் இருந்தபோது புகார்தாரர் ஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 513/2015, இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) r/w TNPHW act படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ. 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் முருகராஜா அன்றைய தினமே 12.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கச்சம்மாள் மற்றும் ஆனந்தி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே (**அ.சா.ஆ 3 மற்றும் 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ஈஸ்வரி, சுதா, பாண்டியம்மாள் ஆகியோர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து வாக்கு

மூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை 27.12.2015ம் தேதி 13.45 மணிக்கு காரணம்கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தேன்மொழி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **(அ.சா.ஆ.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்நதால், எதிரியின் மீது மேற்சொன்ன பிரிவுகளின்கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா. 1 கொடுத்த பொய்யான வாக்குமூத்தை பெற்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யப்படாமல், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.